திரு. மு. அம்பிகாபதி : மன்னார்குடி தாலுகா விவசாயத் தொழிலாளர்கள் நிறைந்து வாழுகின்ற பகுதி. தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகமாக குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை நடைபெறுவது மன்னார்குடி மருத்துவமனையிலேதான். ஒரு நாளைக்கு ஆயிரம் பேர்கள் வெளி நோயாளிகளாக வந்துபோகிறார்கள். இவ்வளவு ஜனநெருக்கம் மிக்க அந்த மருத்துவ மனைக்கு சிறந்த முறையில் இத்தகைய கோரிக்கை களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அதற்காக 25—7—81 அன்று நம்முடைய ஹெல்த் டிபார்ட்மெண்டிலிருந்து மத்திய அரசுக்கு — நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கடிதம் எழுதிய பிறகு அதன் தொடர்ச்சியாக — நாம் ஒரு கடிதத்தை எழுதி யிருக்கிறோம். போஸ்ட்பார்ட்டம் பிரிவு, பேமிலி பிளானிங் அறுவை சிகிச்சைக்கு உதவியாக ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று கேட்டு, போஸ்ட்பார்ட்டம் எல்லைக்குள் கொண்டுவரப்படவேண்டுமென்று கேட்டு எழுதியிருக்கிறோம். விரைவிலே பதில் வரும் என்று நினைக்கிறேன்.

கள்ளக்குறிச்சி அரசினர் மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தும் திட்டம்.

* வினா எண். 54—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி அரசினர் மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி அரசினர் மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தும் திட்டம் 1982-83 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும்.

போக்குவரத்துக் கழக கட்டிடங்களில் தொழிற்சங்கங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம்

* வினா எண். 55—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்திலுள்ள போக்குவரத்துக் கழக கட்டிடங் களில் தொழிற்சங்கங்களுக்காக இடம் கொடுக்கப்பட்டுள்ளத ?

(ஆ) ஆம் எனில், எத்தனை சங்கங்களுக்கு எங்கெங்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது?